சனிக்கிழமை, 24 நவம்பர் 2018

# குழந்தையின்மை: ராமச்சந்திரா மருத்துவமனையில் இலவச பரிசோதனை

**சென்னை, நவ. 23:** போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனை சார்பில் குழந்தையின்மை பிரச்னைக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் வரும் புதன்கிழமை (நவ.28) நடைபெறவுள்ளது.

மருத்துவமனை வளாகத்தில் அன்றைய தினம் காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை முகாம் நடைபெறுகிறது. குறிப்பிட்ட பரிசோதனைகள் இலவசமாகவும், சில பரிசோதனைகள் குறைந்த கட்டணத்திலும் மேற்கொள்ளப்படும்.

இந்தப் பரிசோதனைகளின் அடிப்படையில் மகப்பேறில்லாத தம்பதிகளுக்கு மருத்துவர்களின் ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளதாக அதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவமனையின் குழந்தையின்மை சிகிச்சைப் பிரிவு சார்பில் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மருத்துவமனை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.